www.prepp.in



**TE1MI/23**

Booklet Serial No. :

Don't write anything in this space

Don't write anything in this space

தேர்வு : ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு–I (தொகுதி–I)க்கான முதன்மைத் தேர்வு

பாடம் : கட்டாயத் தமிழ் மொழித் தகுதித்தாள் (பத்தாம் வகுப்புத்தரம்) (தாள் – I) (விரிந்துரைக்கும் வகை)

தேர்வு நாள் : 10.08.2023 மு.ப.

Do not use this area

தேர்வு : ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு–I (தொகுதி–I) க்கான முதன்மைத் தேர்வு

பாடம் : கட்டாயத் தமிழ் மொழித் தகுதித்தாள் (பத்தாம் வகுப்புத்தரம்) (தாள் – I) (விரிந்துரைக்கும் வகை)

தேர்வு நாள் : 10.08.2023 மு.ப.

பதிவு எண் :

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

**சான்று**

நான் இந்த வினா விடைத் தொகுப்பை விண்ணப்பதாரரின் பதிவு எண், புகைப்படம் மற்றும் கையொப்பம் ஆகியவற்றை நுழைவுச் சீட்டினில் சரிபார்த்த பின் வழங்கினேன்.

அறைக்கண்காணிப்பாளரின் கையொப்பம் மற்றும் தேதி

**சான்று**

நான் இந்த வினா விடைத் தொகுப்பில் பதில் அளிக்காத விடைப் பகுதிகளை தேர்வு எழுதிய பேனாவினால் குறுக்குக் கோடிட்டு பயன்படுத்தப்படவில்லை என்பதை உறுதியளிக்கிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

Do not use this area

Prepp
Your Personal Exams Guide

# தாள் – I

# கட்டாயத் தமிழ் மொழித் தகுதித்தாள்

## (விரிந்துரைக்கும் வகை)

## (பத்தாம் வகுப்பு தரம்)

கால அளவு : மூன்று மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : 100

(இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு 32 பக்கங்களைக் கொண்டுள்ளது)

**அறிவுரைகள்**

(கீழ்க்கண்ட அறிவுரைகளை விண்ணப்பதாரர்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும்)

1. தாள்-Iஇல் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்கள் 40 பெற்றால் மட்டுமே தாள்-II, தாள்-III மற்றும் தாள்-IV ஆகியன மதிப்பீடு செய்யப்படும்

2. விண்ணப்பதாரர்கள், இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு மொத்தம் 32 பக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும். இத்தொகுப்பில் ஏதேனும் குறைபாடிருப்பின், உடனடியாக வேறு தொகுப்பை தேர்வுக் கண்காணிப்பாளரிடம் கோரிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

3. இத்தேர்வைப் பொறுத்தவரை, அழகாக எழுதுவதற்காக தனியாக மதிப்பெண்கள் ஒதுக்கப்படவில்லை.

4. ஒவ்வொரு வினாவிற்கும் தனித்தனியாக விடை எழுதுவதற்கென இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு வினாவிற்கும் விடையளிக்க ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே விடையளிக்க வேண்டும். விடையளிக்க ஒதுக்கப்பட்ட கட்டத்திற்கு வெளியே எதையும் எழுதக்கூடாது.

5. விண்ணப்பதாரர்கள் தங்களது பதிவு எண்ணை இத்தொகுப்பில் எந்த இடத்திலும் எழுதக்கூடாது. இந்த அறிவுரையை மீறும் விண்ணப்பதாரர்களுக்கு உரிய தண்டனை விதிக்கப்படும்.

6. விண்ணப்பதாரர்கள் விடையளிக்கும் போது வினா எண்ணையும், அதன் உட்பிரிவையும் தவறாமல் குறிப்பிட வேண்டும்.

7. விண்ணப்பதாரர்கள் இந்த வினா-விடைத் தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்துவிடக் கூடாது.

8. விண்ணப்பதாரர்கள் வினாத்தாளின் ஒவ்வொரு பிரிவிலும் அறிவுறுத்தப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். அதற்கு மிகையான எண்ணிக்கையிலான வினாக்களுக்கு விடையளித்தால், ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் மிகையான எண்ணிக்கையில் விடையளிக்கப்பட்டவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

9. விண்ணப்பதாரர்கள் கடித வடிவிலான வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது தங்களது பெயரையோ, பதிவெண்ணையோ எழுதக்கூடாது. தங்களது பெயரில் கையொப்பமிடவும் அனுமதியில்லை. அவ்வாறான வினாக்களுக்கு பதிலளிக்கும்பொழுது வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் முகவரியையே பயன்படுத்த வேண்டும்.

   வினாக்களில் பெயர், முகவரி ஆகியவை குறிப்பிடப்படவில்லையெனில், 'அனுப்புநர்', 'பெறுநர்' முகவரிகளில் அ ஆ இ அல்லது எக்ஸ் ஒய் இசட் அல்லது எக்ஸ் எக்ஸ் எக்ஸ் போன்ற பொதுப் பெயர்களை மட்டுமே எழுதவேண்டும்.

Do not use this area

Prepp
Your Personal Exams Guide

## அலகு — 1 (அ)

*குறிப்பு :* **i) கொடுக்கப்பட்ட தமிழ்ப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும்.**

**(1 × 10 = 10)**

<table>
<tr>
<td>Q.No.<br>1</td>
<td>புவிப்படம் என்பது பூமியின் முழு பாகத்தையோ அல்லது அதன் குறிப்பிட்ட ஒரு பகுதியையோ, கண்களுக்குப் புலப்படும் வண்ணம் குறிப்பிட்ட அளவை முறைகளோடு புவியின் மேற்பரப்பைக் காட்டும் ஒரு வரைபடமாகும். பூமியின் குறிப்பிட்ட பகுதியில் என்னென்ன தன்மைகள் இருக்கின்றன என்பதையும், சிறப்பாக புவியியல் சார்ந்த விளக்கங்களையும் எடுத்துக்காட்டுவது புவிப்படத்தின் பணியாகும்.<br><br>புவிப்படத்தைக் கற்றுக்கொள்ளுதல் என்பது புவிப்படத்தை மையமாக வைத்து புவியியலைப் புரிந்துகொள்ளுதலும், புவியியலை விளக்குதலும் ஆகும். புவிப்படத்தைக் கற்பதால் ஒருவர் புவிப்படக் குறியீடுகளை உள்வாங்கி, பூமியின் வரைபடத்தை தன் மனத்திற்குள் உருவாக்கும் ஆற்றலைப் பெறுகிறார்.<br><br>புவிப்படம் என்பது பூகோள உருண்டை வேறுபட்டது. பூமியின் மொத்தப்பரப்பைப் பற்றியோ அல்லது அதன் ஒரு பகுதியைப் பற்றியோ இரு பரிமாணங்களில் முன்னிலைப்படுத்துவது புவிப்படமாகும். பூகோள உருண்டை என்பது புவிப்பரப்பின் முப்பரிமாணத்தை முன்னிலைப்படுத்துகிறது. பூமியின் மிகச் சிறிய மாதிரி வடிவம்தான் பூகோள உருண்டை.<br><br>பின்வருவன புவிப்படத்தின் அடிப்படைக் கூறுகளாகும்<br>(1) தலைப்பு<br>(2) புவிப்பட அளவை<br>(3) புவிப்பட விளக்கம் அல்லது திறவு விசை<br>(4) திசைகள்<br>(5) புவிப்படக் கோட்டுச் சட்டமும் அமைவிட தகவலும்<br>(6) மரபுக் குறியீடுகளும் சின்னங்களும்</td>
</tr>
</table>

## அலகு — 1 (ஆ)

*குறிப்பு :* **ii) கொடுக்கப்பட்ட ஆங்கிலப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் தமிழில் மொழி பெயர்க்கவும்.**

**(1 × 10 = 10)**

<table>
<tr>
<td>Q.No.<br>2</td>
<td>Population is a dynamic phenomenon where the number, distribution and composition are constantly changing. Human population increases as babies are born and decreases as people die. For most of human history, births have only slightly exceeded deaths every year. As a result, human population grew slowly. About the time of Industrial Revolution, it began to increase rapidly.<br><br>Natural increase of population is the difference between the birth rate and death rate. In fact population is always increasing but only in very rare cases it may decreases through natural or man-made disasters such as famine, landslides, earthquakes, tsunami, epidemics, extreme weather conditions and war.<br><br>Population changes refers to an increase or decrease in the population of an area influenced by the number of births, deaths and migration. The population of the world doubled from 500 million in 1650 to 1000 million in 1850. The projected population for 2025 and 2050 is about 8 billion and 9 billion respectively.</td>
</tr>
</table>

## அலகு — 2

*குறிப்பு :* **i) கொடுக்கப்பட்ட பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்பு தேவையில்லை.**

**(1 × 10 = 10)**

| Q.No. | |
|---|---|
| 3 | **தமிழர் இசைக்கருவிகள் :**<br><br>இசையின் இனிமைக்குத் துணை செய்பவை இசைக் கருவிகள் ஆகும். காலத் தேவைகள், சமயச் சடங்குகள், திருவிழாக்கள் போன்ற நிகழ்வுகளின் பொருட்டு பலவிதமான இசைக்கருவிகள் தோன்றி வளர்ச்சிபெற்றன.<br><br>இசைக்கருவிகள் குரல் இசைக்கு மட்டும் பயன்படுபவை, நாடகத்திற்கு மட்டும் பயன்படுபவை, இரண்டிற்கும் பயன்படுபவை என பலவாகத் தோன்றிக் கிளைத்தன. இசைக் கருவிகளை இசைத்து பாடல் பாடுவோர் பாணர் எனப்பட்டனர்.<br><br>**இசைக் கருவிகளின் வகைகள்**<br><br>இசைக்கருவிகள் தோல்கருவி, நரம்புக்கருவி, காற்றுக்கருவி, கஞ்சக்கருவி என நான்கு வகைப்படும்.<br><br>(1) விலங்குகளின் தோலால் மூடப்பட்டுச் செய்யப்படும் கருவிகள் தோல்கருவிகள் எனப்படும். (எ.கா.) முழவு, முரசு<br><br>(2) நரம்பு அல்லது தந்திகளை உடையவை நரம்புக்கருவிகள் எனப்படும். (எ.கா) யாழ், வீணை<br><br>(3) காற்றைப் பயன்படுத்தி இசைக்கப்படுபவை காற்றுக் கருவிகள் எனப்படும். (எ.கா.) குழல், சங்கு<br><br>(4) ஒன்றோடு ஒன்று மோதி இசைக்கப்படுபவை கஞ்சக்கருவிகள் எனப்படும்.<br>(எ.கா.) சாலரா, சேகண்டி<br><br>**உடுக்கை**<br><br>உடுக்கை என்பது இடை சுருங்கிய ஒரு கைப்பறை ஆகும். இதன் உடல் பித்தளையால் ஆனது. வாய்ப்பகுதி ஆட்டுத்தோலால் பொருத்தப்பட்டிருக்கும். இரு வாய்களையும் இணைக்கும் கயிறுகள் இடையில் கோர்க்கப்பட்டிருக்கும். இவற்றின் மீது ஒரு நாடா சுற்றப்பட்டுத் தொங்கும். வலது வாயின் மீதுதான் அடிப்பர். அவ்வப்போது இடையின் மீதுள்ள நாடாவை அமுக்குவர். பெரிய உடுக்கையைத் தவண்டை என்பர். சிறு உடுக்கையைக் குடுகுடுப்பை என்பர். |

Prepp
Your Personal Exams Guide

## அலகு — 3

*குறிப்பு :* **i) கொடுக்கப்பட்டுள்ள பத்தியை நன்கு படித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**ii) ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு மதிப்பெண்கள்.**

**(5 × 2 = 10)**

Q.No. 4

**பொருள் உணர் திறன்**

சொல்வளம் இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவேனும், தமிழ்மட்டும் அதில் தலைசிறந்ததாகும்.

“தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, தமிழிலுள்ள ஒருபொருட் பலசொல் வரிசைகள் அவற்றில் இல்லாக்குறை எந்தத் தமிழறிஞர்க்கும் மிகத்தெளிவாகத் தோன்றும். தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலியபிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள” என்கிறார் கால்டுவெல் (திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம்).

தமிழ்ச்சொல் வளத்தைப் பலதுறைகளிலும் காணலாமேனும் இங்குப் பயிர்வகைச் சொற்கள் மட்டும் சிறப்பாக எடுத்துக்காட்டப்பெறும்.

**அடிவகை :**

ஒரு தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள்,

தாள் : நெல், கேழ்வரகு முதலியனவற்றின் அடி

தண்டு : கீரை, வாழை முதலியவற்றின் அடி

கோல் : நெட்டி, மிளகாய்ச்செடி முதலியவற்றின் அடி.

தூறு : குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடி.

**இலை வகை :**

**தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்கள்.**

இலை : புளி, வேம்பு முதலியவற்றின் இலை; தாள் : நெல், புல் முதலியவற்றின் இலை; தோகை : சோளம், கரும்பு முதலியவற்றின் இலை; ஓலை : தென்னை, பனை முதலியவற்றின் இலை; சருகு: காய்ந்த இலை.

1. சொல்வளத்தில் சிறந்த மொழி எது?

2. தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிச் சொற்களும் தமிழில் உள்ளன என்பவர் யார்?

3. தண்டு என்பது எவற்றின் அடியைக் குறிக்கும்?

4. கரும்பின் இலை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

5. அடி, இலை என்ற இரண்டையும் குறிப்பிடும் ஒரு சொல் எது?

Prepp
Your Personal Exams Guide

## அலகு — 4

*குறிப்பு :* **i) கொடுக்கப்பட்ட சுருக்கக் குறிப்புக்களைக் கொண்டு விரிவாக எழுதுக.**

**ii) 300 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** **(1 × 10 = 10)**

| | |
|---|---|
| Q.No. 5 | இயற்கைச் சார்ந்து மனிதன் இருந்தான் - நிமிர்ந்த நிலை - ஆதிக்கம் செலுத்தல் - நெருப்பு, சக்கரம் கண்டுபிடிப்பு - உயர் தொழில் நுட்பக் கண்டுபிடிப்பு - சுற்றுசூழலை மாற்றினான் - மனித சுற்றுச்சூழல் - மனிதன், குடும்பம், தொழில் கூறுவது - கல்வி, மதம் - தொடர்புகள் - மனித சுற்றுச்சூழல் மனித தேவையைப் பூர்த்தி செய்யப் பயன்படுகிறது. |

## அலகு — 5

*குறிப்பு :* **i) திருக்குறள் தொடர்பான கட்டுரை வரைக.**

**ii) கொடுக்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.**

**iii) கொடுக்கப்பட்ட வினாவிற்கு 300 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.**

**(1 × 15 = 15)**

| | | |
|---|---|---|
| Q.No. 6 | (அ) | திருக்குறளில் 'கடவுள் வாழ்த்து' எனும் அதிகாரம் மதச்சார்பற்ற நெறியை எடுத்துரைக்கிறது என்பதை விளக்குக. |
| | (ஆ) | உடல் நலம் பேண வள்ளுவம் காட்டும் வழிமுறைகளைக் கட்டுரை வடிவில் தருக. |
| | (இ) | இரந்து வாழ்வது இழிவானது என்பதை வள்ளுவர் வழிநின்று விளக்குக. |
| | (ஈ) | திருக்குறள் துறவியலில் இடம்பெறும் மனித நேயப் பண்புகளைத் தொகுத்து எழுதுக. |
| | (உ) | ஆட்சி செய்பவருக்கு மூத்தவரின் ஆலோசனைகள் எவ்வளவு பயன்தரத் தக்கவை என்பதை வள்ளுவர் வழி நின்று விளக்குக. |

## அலகு — 6

*குறிப்பு :* **i) கடிதம் வரைதல்**

**ii) கொடுக்கப்பட்ட மூன்று வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.**

**iii) 250 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.**

**(1 × 15 = 15)**

| | | |
|---|---|---|
| Q.No. 7 | (அ) | கொரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் புலம் பெயர் தொழிலாளர்களுக்கும் இலவச வேட்டி சேலை இலவச அரிசி வழங்குதல் குடும்பம் ஒன்றுக்கு ரூ. 5,000 வழங்க வேண்டி அரசாணை வெளியிடுதல். |
| | (ஆ) | 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் அடிப்படை கணினி பயிற்சி பெற்ற மாணவர்களின் நிலை குறித்து அறிக்கை ஒன்றைத் தயார் செய்து கல்லூரி கல்வி இயக்குநருக்கு அனுப்புக. |
| | (இ) | சென்னை மெட்ரோ திட்டத்தின் கீழ் புதிதாக அமையவிருக்கும் மெட்ரோ தொடர்வண்டி வழித்தடங்களுக்கான திட்டத்தை மதிப்பீடு செய்க. |

## அலகு — 7

*குறிப்பு :* i) பின்வரும் ஐந்து பிரிவுகளில் ஒவ்வொரு பகுதியிலும் நான்கு வினாக்கள் உள்ளன.

ii) ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

iii) ஒவ்வொரு பகுதிக்கும் நான்கு மதிப்பெண்கள்.

iv) ஐந்து பிரிவுகளுக்கும் சேர்த்து இருபது மதிப்பெண்கள்.

**(5 × 4 = 20)**

| | |
|---|---|
| Q.No. 8 | **கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைச் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :** |
| | (1) கூட்டங்கூட்டமாக |
| | (2) ஆரவாரம் |
| | (3) கூடாநட்பு |
| | (4) எதிர்நீச்சல் |
| Q.No. 9 | **பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க.** |
| | (1) சீரும்சிறப்பும் |
| | (2) கல்வியும் கேள்வியும் |
| | (3) நாளும் கிழமையும் |
| | (4) கண்டும் கேட்டும் |
| Q.No. 10 | **பிரித்தெழுதுக.** |
| | (1) ஐம்பால் |
| | (2) பாடறிந்து |
| | (3) அருந்துணை |
| | (4) இருதிணை |

| Q.No. 11 | **எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக.** |
|---|---|
| | (1) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது. |
| | (2) இங்கு நகரப் பேருந்து நிற்குமா? |
| | (3) காமராசர் நகர் எங்கே இருக்கிறது? |
| | (4) எனக்கு யார் எழுதித் தருவார்கள்? |
| Q.No. 12 | **பிழைநீக்கி எழுதுக :** |
| | (1) ஒவ்வொரு பூக்களும் சிரித்தது. |
| | (2) தென்றல் நன்றாக யாழ் இசைத்தது |
| | (3) பழம் நலுவி பாலில் விளுந்தது |
| | (4) குதிரைகள் ஓடியது நரிகள் பதுங்கியது. |